தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1981 மார்ச் 28.

பங்குனி 15, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ சூழ்ச்சி, முடிவு, துணிவு எய்தல், அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.”

ஒரு செயலைக் குறித்து ஆராய்ச்சி செய்வதன் மூலம் அச் செயலைச் செய்து முடிக்கும் துணிவினைப் பெறவேண்டும். அவ்வாறு முடிவு செய்து எடுத்துவிட்ட செயலை, உடனடியாகச் செய்து முடிக்காமல் காலந்தாழ்த்துதல் குற்றமாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாட்டில் நக்சல்பாரிகள்.

*வினா எண் 525-அ—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78, 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் எத்தனை பேர் ?

(ஆ) 1980 ஜூலை முடிய எத்தனை பேர் சிறைச்சாலைகளில் உள்ளனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

*345ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1981 மார்ச் 28

திரு. எல். இளையபெருமாள் : நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் முதலாளிகளிடம் அரசாங்கம் செய்துள்ள சட்டப்படியான கூலியைக் கேட்ட காரணத்தால், படித்து வேலையற்ற இளைஞர்கள் அந்தக் கூலியைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் செய்திருக்கிற சட்டப்படி முதலாளிகளிடம் கேட்ட காரணத்தால் அதுவும் குறிப்பாக தர்மபுரி, சேலம், தஞ்சை மாவட்டங்களில் ஏழை ஆதிதிராவிட மக்களையும், படித்து வேலையற்ற பின்தங்கிய மக்களையும் அவர்கள வேலை கேட்ட காரணத்தால் அநியாயமாக அடிக்கப்பட்டு இம்சித்து இருப்பது அரசுக்குத் தெரியுமா? இப்படி மேற்கொண்டு நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது? குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அரசாங்கம் செய்து அது தமிழ்நாடு பூராவும் அமலில் இருப்பதால்தான் அவர்கள் கேட்கிறார்கள், அப்படிக் கேட்கப் பட்ட காரணத்திற்காக அவர்கள் இப்படி பழி வாங்கப்படு கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற நிலை நாட்டில் பொதுவாக இருக் கிற நிலைகள்தான். ஆகவே படித்துவிட்டு வேலையற்றிருக் கிறார்கள் என்ற காரணத்தாலோ அல்லது ஏழ்மையில், வறுமை யில் வாடுகிறார்கள் என்ற காரணத்தாலோ அவர்கள் எல்லாம் நக்சல்பாரிகளாக மாறுகிறார்கள் என்று கூறுவதற்கில்லை. குறிப்பிட்ட கொள்கை அடிப்படையில் இது ஒரு தீவிர இயக்கமாக ஒரு சிலரை ஈர்த்து அவர்களை தயாராக்கி உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை, கைது செய்யப்பட்டவர்களானாலும் சரி, தண்டனை வழங்கப்பட்டவர்களானாலும் சரி, அல்லது இப்போது விசா ரணையில் இருப்பவர்களானாலும் சரி இப்படி ஒரு தீவிர இயக் கத்தில், சமுதாயத்தில் இருக்கிற எந்தக் கட்சியினரும் இன்று ஒப்புக் கொள்ளாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதின் காரணமாகத்தான் அவர்கள் கைது செய்யப்படவும், தண்டனை அளிக்கப்படவும் உள்ள நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நிரபராதிகள் எந்த வகையிலும் கைது செய்யப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ கூடாது, அதற்கான வகைகளில் அவர்களுக்கு போதுமான அளவிற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில சமயங்களில் சில பேர்களை விசாரிக்க வேண்டி வருகிறது. அப்படி நிரபராதிகள் மீது கொடுமைகள் நிகழும் நிலைமைகள் இருக்குமானால், அது சுட்டிக்காட்டப்படுமானால், அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அவை முன்னவர் அவர்கள் தீவிர இயக்கம் காரணமாக நக்சல்பாரிகள் தோன்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் தமிழ்நாடு பூராவும் எல்லாப் பகுதிகளிலும் இந்த நக்ஸலைட்ஸ் இயக்கம் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை. இது குறிப்பாக பொருளாதார

ரீதியில் மிகவும் பின் தங்கியிருக்கும் தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளில் மட்டும்தான் இருக்கிற காரணம் பற்றி அரசு பரிசீலித்ததா? உண்மையாக அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களை அங்கிருக்கக்கூடிய மிராசுதார்கள் கொடுமைப் படுத்துவதன் காரணமாகத்தான் இந்த இயக்கம் அந்தப் பகுதி களில் வேரூன்றியிருக்கிறது என்பதை அரசு கண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கனவே கூறியது போல் வறுமை காரணமாகவோ அல்லது ஏழ்மை காரணமாகவோ அல்லது வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாகவோ இப்படிப்பட்ட நிலைகள் உருவாகியிருப்பதாக தெரியவில்லை. நக்சல்பாரிகள் என்ற பெயரே அதைச் சுட்டு கிறது. அப்படிப்பட்டதொரு இயக்கம் நக்சல்பாரி என்ற இடத் தில் ஆரம்பித்து அது தொடர்ந்து பரவ, ஒருவர் நான்கு பேர் களையும், நான்கு பேர்கள் பத்து பேர்களையும் உருவாக்குகிறார் கள். அப்படி ஏற்பட்டு வருகிற காரணத்தால்தான் ஒரு குறிப் பிட்ட பகுதிகளில் இது இருக்கிறது. வறுமை என்று பார்ப்போ மானால், ஏழ்மை என்று பார்ப்போமானால் தர்மபுரி மாவட் டத்தை விட கொடுமைப்படுத்துவது—இன்னும் சொல்லப் போனால் தஞ்சை மாவட்டத்தில், திருச்சி மாவட்டத்தில் இருக் கிற மிராசுதார்கள், மற்றவர்கள் கொடுமைப்படுத்துகிற அள விற்கு தர்மபுரியில் மற்ற இடங்களில் கொடுமைப்படுத்துகிறார் கள் என்று சொல்ல முடியாது. ஆக, இது ஒரு தீவரமான இயக்க மாக இருந்து அதில் சில பேர்கள் ஈடுபடுகிறார்கள். வேறு மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும் பரவலாக மக்களிடம் இருக்கிறதாக சொல்ல முடியாது ஆந்திராவை, எடுத்துக் கொண் டாலும் சரி, கேரளாவை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளில்தான் குறிப்பிட்ட ஒரு சில இடங் களில்தான் இந்த இயக்கம் பரவி வருகிறது. இதை கூடுமான அளவிற்கு கட்டுப்படுத்தும் அளவில் ஓரளவு வெற்றி பெற்றிருக் கிறோம். இன்னும் தீவிரமான முறையில் அதை அறவே நீக்கும் முயற்சியினை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்கான நிலைகளை அரசு ஆராய்ந்து அவ்வப்போது நட வடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நக்சல்பாரி களைக் கைது செய்வதற்கு என்று முயற்சி எடுத்தபோது, அவர் களை சுடுகிறபோது செல்ப் டிபென்சுக்காக போலீஸ் சுட்டதாக வும், அதனால் அவர்கள் இறந்ததாகவும் போலீஸ் தரப்பிலே கூறப்பட்டிருக்கிறது. வந்த சீரியசான சார்ஜஸ் கவர்ன் மெண்டின் பேரில் என்னவென்றால், உயிரோடு அவர்களைக் கைது செய்த பிறகு, அவர்கள் இனிமேல் இந்த மாதிரியான விவகாரத்தில் ஈடுபடக்கூடாது என்பதற்காக, பிளைண்டிங் காம்பைன் இன்னொரு மாநிலத்திலே நடந்தமாதிரி, அவர்களை உயிரோடு பிடித்து, பிறகு வேண்டுமென்றே சுட்டுக் கொன்ற

தாக செய்திகள், சீரியஸ் சார்ஜஸ் கவர்ன்மெண்ட் பேரில் வந்திருக்கின்றன. அதைப்பற்றி சீரியசான இன்வெஸ்டிகேஷன் நடத்தப்பட்டதா? லோகல் போலீஸ் இன்வெஸ்டிகேஷன் ஆபீசர்மீது செபரேட்டாக இன்வெஸ்டிகேஷன் நடத்தியிருக்கிறதா? அப்படியிருந்தால் அதனுடைய ரிசல்ட் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வரவில்லை. ஆகவே, ஆங்காங்கே அப்படி சுடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வப்போது வெளியே இப்படி நடந்திருக்கிறது. காவல் நிலையத்தில் வைத்து சுட்டார்கள் என்ற அளவில் புகார்கள் வருமேயானால், அதைப்பற்றி விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் இதுவரை பல்வேறு இடங்களில், குகைகளில், மலைப் பகுதிகளில் ஒளிந்திருந்து, பிடிபட்ட இடத்தில் சுட நேர்ந்தது என்றுதான் செய்திகள் வந்திருக்கிறதே தவிர, காவல் நிலையத்தில் வைத்துச் சுட்டார்கள் என்ற செய்தியோ, நிலைமையோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குற்றச்சாட்டுகள் வருமேயானால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி பேரால் இடையிலே அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இயக்கத்திற்குச் சம்பந்தமில்லாமல் கொள்ளையடித்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற வகையில்தான் நாட்டில் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வகையில் இன்றைய தினம் தர்மபுரி மாவட்டம் தவிர வட ஆற்காடு மாவட்டத்திலும் பல பேர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்தில் இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள்? அதிலே இறந்து போனவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 525-ஆ, 525-இ ஆகியவைகளும் நக்சல்பாரிகளைப் பற்றியதாக இருக்கின்றன, எனவே, இந்த இரண்டுக்கும்கூட அமைச்சர் பதிலளித்து விடலாம். உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும்.

*வினா எண் 525-ஆ—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க காவல் படைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?